## மீன் அமினோ அமிலம்.. ரசாயனப் பயிர்ஊக்கிகளுக்கு ரகளையான சவால்..!

10.10.2012




இயற்கை விவசாயத்தில் மிகமுக்கியமான இடுபொருள்களில் ஒன்று மீன் அமினோஅமிலம். சிறந்த பயிர் வளர்ச்சி ஊக்கியான இது, மகசூல் அதிகரிப்புக்குப் பெரிதும் உதவி புரிகிறது. குறைந்த செலவில் மீன் கழிவுகளைக் கொண்டே இதை தயாரித்துவிட முடியும் என்பதால், இயற்கை விவசாயிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்கிறார். இதன் மகத்துவத்தை அனுபவப்பூர்வமாக அறிந்திருக்கும் திருவாரூர் மாவட்டம், விலங்கைமான் தாலூகா, வீரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி இயற்கை விவசாயி மயில்வாகனன்.

**திடமான நாற்று!**

எங்க குடும்பத்திற்கு 20 ஏக்கர் நிலம் இருக்கு. இது எல்லாவற்றிலுமே முழுமையாக இயற்கை விவசாயம்தான். 2008 – ம் ஆண்டு பாலையூரில் 'பசுமை விகடன்' நடத்தின பயிற்சி வகுப்பில்தான் மீன் அமினோ அமிலம் பற்றி தெரிந்து கொண்டேன். அதிலிருந்து நான்கு வருடமாக என்னோட 20 ஏக்கர் நிலத்திலும் தொடர்ச்சியாக மீன் அமினோ அமிலத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

குறுவையில் ஒற்றை நாற்று நடவிற்காக, ஒரு ஏக்கருக்கு 2 சென்ட் வீதம் நாற்றங்கால் அமைப்போம். அதில், விதைப்பிலிருந்து 8-ம் நாள் 10 லிட்டர் தண்ணீரில், 4 மில்லி மீன் அமிலத்தைக் கலந்துத் தெளிப்போம். சம்பாவில் சாதாரண நடவிற்கு, ஒரு ஏக்கருக்கு 5 சென்ட் வீதம் நாற்றங்கால் அமைப்போம். விதைப்பிலிருந்து 18-ம் நாள், 5 மில்லி மீன் அமிலத்தை 10

லிட்டர் தண்ணீரில் கலந்துத் தெளிப்போம். தெளித்த 5 –ம் நாளிலேயே கண்கூடாக பலன் தெரியும். நாற்று நன்றாக பசுமையாகவும், தெளிவாகவும், திடமாகவும் இருக்கும். நாற்றோட வளர்ச்சியும் வேகமெடுக்கும்.

**எலித்தொல்லை இல்லை!**

ஒற்றை நாற்று நடவு வயலில், நடவிலிருந்து 40 – ம் நாள், ஏக்கருக்கு 1 லிட்டர் அமிலத்தை 120 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்போம். சாதாரண நடவு வயலில், 25 – ம் நாள் இதே விகிதத்தில் தெளிக்க வேண்டும். இதைத் தெளித்ததும் பயிரில் படிப்படியாக பசுமை அதிகரிக்கும். அதோட நெல்மணிகள் உதிராமல் இருக்கும். பயிருடைய தண்டுப்பகுதியும் நல்ல திடமாக உறுதியாக இருக்கும். எங்க பகுதியில் எலித் தொல்லை அதிகம். பெரும்பாலான விவசாயிகள் எலிக்கிட்டி வைத்திருப்பார்கள். ஆனால், என்னுடைய நெற் பயிர்களில் தண்டு நன்கு திடமாக உறுதியாக இருப்பதினாலும் பயிர்களுக்கு இடையில் இடைவெளி அதிகமாக இருப்பதாலும் பெரியளவில் எலிகளால் சேதாரம் இருப்பதில்லை என்றார் மயில்வாகனன்.

**செலவும் குறைவு !**

“மீன் சந்தைகளில் கிடைக்கும் மீன் கழிவுகளை இலவசமாகவோ, குறைந்த விலைக்கோ வாங்கியே மீன் அமினோ அமிலம் தயாரித்துவிட முடியும். நான் 2 கிலோ மீன் கழிவை, 20 ரூபாய்க்கு வாங்குகிறேன். 2 கிலோ வெல்லத்தோட விலை 80 ரூபாய். ஆக மொத்தம் ஒரு லிட்டர் மீன் அமினோ அமிலம் தயாரிக்க, 100 ரூபாய்தான் செலவாகும். ஆனால், இதனால் கிடைக்கும் பலன்கள் மிக மிக அதிகம் என்றார்.

**இப்படித்தான் தயாரிக்க வேண்டும்.. மீன் அமிலம்!**

நன்கு வாய் அகன்ற மூடியுடன் கூடிய 5 கிலோ கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் வாளியில், 2 கிலோ மீன் கழிவுகளைக் கொட்டி, அதன் மீது 2 கிலோ வெல்லத்தைப் போட்டு மூடி வைக்க வேண்டும். கெட்ட வாயுக்கள் வெளியேறுவதற்காக தினமும் இதனைத் திறந்து மூட வேண்டும். 20-ம் நாள் நன்கு நொதித்து, தேன் நிறத்தில் காட்சி அளிக்கும். இதில் கொஞ்சம்கூட துர் நாற்றம் இருக்காது. அதுதான் மீன் அமினோ அமிலம். இதை வடிகட்டி கசடுகளை நீக்கினால், சுமார் ஒரு லிட்டர் மீன் அமினோ அமிலம் கிடைக்கும். அந்த நிமிடத்திலிருந்தே இதனைப் பயன்படுத்தலாம்.

**அதிகபட்சம் 6 மாதங்கள் வரை வைத்திருந்தும் பயன்படுத்தலாம்.**

**தொடர்புக்கு,**
**மயில்வாகனன், செல்போன் : 98849 – 04437.**

***ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு Date : 10.10.2012 , www.vikatan.com***